**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.142/2017 |
| Prosecution Witness | : | **அ.சா.**19 |
| Name | : | **வாசுகி** |
| Father's/Husband Name: | : | ஜகதீசன் |
| Address : | : | கிழக்கு தெரு, சண்முகா ரைஸ்மில், தொண்டமாந்துறை, வேப்பந்தட்டை வட்டம், பெரம்பலூர் மாவட்டம். |
| Age | : | 65/2022 |

<u>தேதி:17/11/2022</u>

**முதல் விசாரணை :** <u>சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.</u>

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது விவசாய வேலை செய்து வருகிறேன். தொண்டாமாந்துரை கூட்டுறவு சங்கத்தில் 1975 ம் ஆண்டு முதல் கணக்கு வைத்துள்ளேன். என்னுடைய கணக்கு எண் 638. எனது வங்கி கணக்கிலிருந்து இரண்டு Withdrawal Slip மூலமாக பணம் எடுக்கப்பட்டதாக என்னிடம் சங்கத்தின் மேல் அதிகாரிகள் வந்து விசாரித்தனர். அப்போது அதை நான் பார்த்தபோது ஒரு Withdrawal Slip ல் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என கூறினேன். மற்றொன்றில் உள்ளது என்னுடைய கையொப்பம் எனவும் நான் கூறினேன். என்னிடம் காண்பிக்கப்படும் 03/05/1996 ல் Withdrawal Slip ல் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.**25 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25/04/1996 ல் Withdrawal Slip ல் உள்ள கையொப்பம்

என்னுடையது அல்ல. இதை பதிவு செய்து கொண்டு என்னிடம் கையொப்பம் பெற்றனர். என்னிடம் காண்பிக்கப்படும் 21/05/1999 அன்று பதிவு செய்யப்பட்ட இந்த வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.26** ஆக குறியீடு செய்யப்டுகிறது. இது சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை : (1 வது எதிரி தரப்பில்)**

எதிரிக்கு போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை இல்லை என்றதால் விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

**குறுக்கு விசாரணை : (2 முதல் 4 எதிரிகள் தரப்பில்)**

அ.சா.ஆ.26 ல் உள்ள வாக்குமூலத்தை என்னிடம் எப்போது விசாரித்தார்கள் என நினைவில்லை. ஆனால் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு விசாரித்தனர். பெரம்பலூரில் உள்ள தெப்பக்குளம் அருகில் உள்ள கூட்டுறவு துணை பதிவாளர் அலுவலகத்தில வைத்து என்னை விசாரித்தனர். அப்போது எனது வங்கி பாஸ் புத்தகத்தை அவர்களிடம் காண்பித்தேனா என எனக்கு நினைவில்லை. அ.சா.ஆ.26 ல் அடித்தல் திருத்தல்கள் உள்ளது என்றால் சரிதான். நான் செல்வதற்கு முன்பே அந்த அலுவலகத்தில் தயார் செய்து வைத்த ஆவணத்தில் கையொப்பம் பெற்றனர் என்றால் சரியல்ல. நான் வங்கியிலிருந்து பணம் எடுப்பதற்கு நான் நேரடியாக செல்வதில்லை, Withdrawal Slip ல் கையொப்பமிட்டு எனது கணவரிடம் கொடுத்து நான் எடுத்துக்கொள்வேன். அதனால் 25/04/1996 ம் தேதியிட்ட Withdrawal Slip-ல் எனது கையொப்பமிட்டாரா அல்லது வேறுயாரும் கையொப்பமிட்டனரா என எனக்கு தெரியாது என்றால் எனது கணவர்

நிச்சயமாக கையொப்பமிடவில்லை. எனது வங்கி பாஸ் புத்தகத்தை பார்த்தால்தான் அந்த தேதியில் இந்த தொகை என்னால் எடுக்கப்பட்டதா இல்லையா என என்னால் கூற முடியும் என்றால் சரியல்ல. ஏனென்றால் எனது பாஸ் புத்தகத்தில் அந்த பதிவு இல்லை. 15 ஆயிரம் பணம் எடுத்த பிறகு பண்மில்லை. காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை என்றாலும், இந்த வழக்கிற்கும் திருஞானசம்பந்தம், கணபதி மற்றும் வெங்கடேசன் ஆகியோர்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court
read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

Sd/-
Judicial Magistrate No.I,
Perambalur.

LIVE LAW